**13.11.2025.**

**MCOP.No.30/2023**
**ம.சா.1 : சின்னதுரை**
**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) இந்த விபத்தில் எனக்கு அடிபட்ட உடன் அரசு ஆத்தூர் மருத்துவமனைக்கு நான் சென்றேன் என்றால் சரிதான். நான் விபத்தின்போது மதுவின் ஆதிக்கத்தில் இருந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேடு எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் இந்த விபத்து நடு ரோட்டில் நடந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஓரமாக தான் நின்று கொண்டு இருந்தேன்.

2) நான் வடக்கு பக்கம் நின்று கொண்டு இருந்தேன். தெற்கில் எனது வீடு. ரோட்டை கடந்து தான் எனது வீட்டிற்கு செல்ல வேண்டும். சாட்சி நான் ரோட்டிற்கு ஓரமாக தான் நின்று கொண்டு இருந்தார் என்று தெரிவிக்கிறார். மேற்படி மாதிரி வரைபடம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி இரு சக்கர வாகனத்தில் ஓரமாக தான் நின்று கொண்டு இருந்ததாக சொல்கிறார். நான் விபத்து சமயத்தில் நெடுஞ்சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் திடீரென்று இரு சக்கர வாகனத்தில் சாலையை கடந்ததால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் திடீரென்று கடந்ததால் என் இரு சக்கர வாகனத்தின் முன் பக்கம் சேதாரம் ஆனது என்றால் சரிதான். மேற்படி என்னுடைய டிவிஎஸ் எக்ஸ்எல் TSG 6928 எம்விஐ ரிப்போர்ட் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த ஆம்னி காரின் ஓட்டுநர் நிதானமாகவும் கவனமாகவும் தான் வாகனத்தை நெடுஞ்சாலையில் ஓட்டி வந்தார் என்றும் நான் திடீரென்று ரோட்டின் குறுக்காக வந்ததால் தான் விபத்து ஏற்பட்டு மேற்படி ஆம்னி காரின் இடது புறத்தில் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆம்னி காரின் எம்விஐ ரிப்போர்ட் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து

சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி 30.02.2022 என்றால் சரிதான். என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் தான் நான் பின்யோசனை செய்து இரண்டு நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) சாட்சி இரண்டு நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்கிறார். என்னுடைய மனுவிலும் நிருபண வாக்குமூலத்திலும் ரோட்டை கடக்க வேண்டி சைகை செய்ததாகவும் வாகனத்தின் விளக்கு சைகை செய்யததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து என்னடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதால் மேற்படி விபத்திற்கு 4ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இன்றும் நான் நிலத்தை ஓட்டி விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு நான் எந்த வேலையும் செய்யவில்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் மூட்டை தொழில் செய்வதை நிருபிப்பதற்காக மூட்டை தூக்கும் சங்கத்திலோ அல்லது அமைப்பு சாரா சங்க தொழிலோ இருந்ததற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) நான் இன்றும் மாடு வைத்து பால் கறந்து வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மனைவி தான் செய்து வருகிறார். நான் இந்த மனுவிற்காக எந்த வேலையும் செய்யவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சரியாகி முன்பு போல் எல்லா வேலைகளும் செய்து வருகிறேன் என்றும் இந்த விபத்தினால் எனக்கு எவ்வித ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 29.09.2022 க்கு பின்னிட்டு நான் தொடர் சிகிச்சை எடுத்துகொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த மனுவில் பல்வேறு தலைப்புகளில் கோரி உள்ள நஷ்ட ஈடு

தொகை மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நான் தான் முழு காரணம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.13 17:41:56 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**